

# தனித்தமிழ் இயக்க வரலாற்றில் மறைமலையடிகள்

முனைவர்: க. பிரீதா
உதவிப் பேராசிரியர் - தமிழ்த்துறை,
சி.டி.டி.இ. மகளிர் கல்லூரி

பத்தொன்பது மற்றும் இருபதாம் நூற்றாண்டுக் காலக்கட்டம் தமிழிலக்கிய மரபில் இயக்கங்களின் காலமாக அறியப் பெறுகின்றது. அந்நிய ஆதிக்கத்திற்கும் தமிழ் மொழியின் மீதான அந்நிய மொழிக்கலப்பிற்கும் எதிரான எழுச்சி இந்தச் சூழலில் தான் உருப்பெற்றது. காலங்காலமாகப் பிறமொழித் தாக்கத்தில் மயங்கிக் கிடந்த தமிழினம் தனது சமூகத்தின் கலை இலக்கிய பண்பாட்டுத் தன்மைகள் ஒட்டு மொத்தமாகச் சிதைக்கப்படுவதை உணரத் தொடங்கிய நேரமும் இதுவே எனலாம். நிறைந்த புலமையோடும் அறம் சார்ந்த பண்போடும் வாழ்ந்திருந்த தமிழ்ச்சமூகத்தைப் பற்றிய புரிதல் இந்த நேரத்தில் அவசியமாயிற்று. ஐரோப்பியரின் வருகையும் அச்சு ஊடகத்தின் தாக்கமும் தமிழ்மொழி மீட்புக்கான வாயிலைத் திறந்தன. தேசவிடுதலையும் தன்மானம் சார்ந்த மொழியறிவும் மொழி சார்ந்த பண்பாட்டு அடையாளங்களும் இந்தக் காலக்கட்டத்தின் வீறுகொண்ட நிகழ்வுகளாகச் செயல்படத் தொடங்கின.

தாய்மொழிப் பற்றும் தமிழின உணர்வும் தனித்தமிழியக்கத்தின் வலிமையான கருதுகோளாக விளங்கின. தமிழின் மேன்மை பற்றிய கருத்தாக்கங்கள் தனித்தமிழியக்கத்தின் வழி சமூகப் பொறுப்புகளாக முன் வைக்கப்பட்டன. தமிழ் மரபை மீட்டெடுப்பதற்கான தேவையைத் தனித்தமிழியக்கம் முன் வைக்கிறது. பல்வேறு தமிழறிஞர்களால் தனித்தமிழுக்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு இருந்தாலும் தனித்தமிழ் உணர்வை இயக்க ரீதியாகத் தொடங்கி வழி நடத்தியவர் மறைமலையடிகள் ஆவார். இவர் தம் சீரிய முயற்சியால் 1916இல் தனித்தமிழியக்கம் உருவாகித் தமிழக அரசியலில் பல புதுமைகளைச் செய்தது. இருபதாம் நூற்றாண்டில் தமிழ்மொழியின் வளர்ச்சிக்கும் பாதுகாப்பிற்கும் அரணாக இவ்வியக்கம் நின்றது எனில் மிகையில்லை.

'தனித்தமிழியக்கம் தமிழ் மண்ணில் தோன்றிய மொழிசார் இயக்கங்களில் முதன்மையானது. காலந்தோறும் தமிழுக்கு ஏற்பட்ட அக, புறப்பகைகளை அழித்து மொழி சிதையாமல் காத்த பெருமைக்குரிய இயக்கம் அது. இவ்வியக்கம் தமிழைக் காத்த காவல் அரண். தமிழின் பல்திற ஆற்றல்களைத் தமிழர்க்கும் மாற்றார்க்கும் உணர்த்திய கலங்கரை விளக்கமாகும்.'

தமிழின் அடையாளத்தைக் காப்பாற்றிக் கொள்ள பல போராட்டங்களைச் சந்தித்த இயக்கம் தனித்தமிழியக்கம். வரும் தலைமுறையினர்க்கு இத்தகைய பண்பாட்டுப் புரிதல்கள் அவசியமாகின்றன. அதனடிப்படையில் தனித்தமிழியக்க வரலாற்றில் மறைமலையடிகளின் பங்களிப்பு தனித்த இடம் பெறுகின்றது.



# தனித்தமிழ் இயக்க வரலாற்றில் மறைமலையடிகள்

முனைவர்: க. பிரீதா
உதவிப் பேராசிரியர் - தமிழ்த்துறை,
சி.டி.டி.இ. மகளிர் கல்லூரி

**சொ**ல்வளமும் பொருள் வளமும் நிறைந்த மொழி தமிழ். காலத்தின் தேவைக்கேற்பப் புதிய கலைச்சொற்களைப் படைத்துக் கொள்ளும் தனித்துவம் பெற்றது நமது தாய்மொழி. நாம் தாய்மொழியில் பேசவும் எழுதவும் செய்கின்ற போது காட்சி ரீதியான புரிதல் நமக்குள் உணரப்படுகின்றது. இந்த உணர்வே மொழிப்பற்றாக நமக்குள் உருப்பெறுகின்றது.
தமிழ்மொழியோடு பிறமொழி கலந்து எழுதுவதைத்,
'தமிழிற் பிறமொழிச் சொற்களைப் புகுத்துதல் எது போலிருக்கின்றதென்றால் எல்லாவுறுப்புக்களும் அமைந்த அழகியதோர் உடம்பில் உள்ள உறுப்புகளை வெட்டி எறிந்துவிட்டு, வேறு மண்ணாலும் மரத்தாலுஞ் செயற்கையாக அவ்வுறுப்புகள் போற் செய்து அவற்றை அதன்கண் ஒட்ட வைத்துப் பார்த்தலுக்கே ஒப்பாயிருக்கிறது"
எனக் கூறுகின்றார் மறைமலையடிகள். மொழி வளத்தை உணர்ந்து கொள்ள மொழிக்கலப்பு தவிர்க்கப்பட வேண்டும் என்பது அவர்தம் கொள்கைப்பிடிப்பு.
மறைமலையடிகள் தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மும்மொழிகளில் புலமை பெற்றிருந்தார். அவர் காலத்தில் அந்நிய மொழியின் மோகம் மிதமிஞ்சி இருந்தது. இருப்பினும் தாய்மொழிப் பற்றால் தமிழின் வலிமையைப் பிறர் உணரச் செய்தார். ஆரம்ப காலத்தில் திருவனந்தபுரத்தில் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார். பின்னர்ச் சென்னை கிறித்துவக் கல்லூரித் தமிழ்த்துறையில் 1898இல் ஆசிரியராகச் சேர்ந்தார். அப்போது தமிழ் வரலாற்றுப் புலமையும் படைப்புத் திறனும் மிக்க பரிதிமாற்கலைஞருடைய நட்பும் ஆதரவும் அடிகளாருக்குக் கிட்டியது. அந்நேரத்தில் இனப்பாகுபாடு காரணமாகத் தமிழும் வடமொழியும் மோதிக் கொண்ட சூழல் உருவானது. தமிழின் தொன்மையைச் சிதைக்கும் வகையில், தமிழ் சமஸ்கிருதத்திலிருந்து பிறந்தது எனப் புனையப்பட்ட ஒரு கொள்கை உருவானது. அதைக் கண்டு வெகுண்டெழுந்த அடிகளார், 1902இல் ஞானசாகரம் இதழில் அதற்குக் கடுமையான மறுப்பு தெரிவித்தார்.
சிறந்த தமிழிலக்கியப் புலமை பெற்றிருந்த அடிகளார் தன்னுடைய இலக்கிய ஆராய்ச்சியின் வழி செம்மாந்த தமிழ் மரபை வெளிக் கொணர்ந்துள்ளார். 1906இல் பட்டினப்பாலை ஆராய்ச்சி நூலை வெளியிடுகின்றார். மேலும் முல்லைப்பாட்டு இலக்கியத்திற்கு சிறந்த உரை எழுதுகின்றார். இப்படியான இலக்கிய ஆய்வின் வழி சமூக உருவாக்கத்திற்கான முக்கிய காரணிகளில் ஒன்றாகத் தாய்மொழியின் தேவையை உணர்த்துகின்றார். சங்க காலத் தமிழினத்தின் மொழி ஆற்றலை உலகறியச் செய்கின்றார். சங்க இலக்கிய ஆய்வுகளுள் இன்றைக்கும் தனித்தன்மை வாய்ந்தவையாக இந்நூல்கள் திகழ்கின்றன.



# தனித்தமிழ் இயக்க வரலாற்றில் மறைமலையடிகள்

முனைவர்: க. பிரீதா
உதவிப் பேராசிரியர் - தமிழ்த்துறை,
சி.டி.டி.இ. மகளிர் கல்லூரி

தாம் நடத்திய 'ஞானசாகரம்" இதழுக்கு 'அறிவுக்கடல்" எனத் தனித்தமிழில் பெயர் சூட்டினார். எண்ணிய எண்ணமெல்லாம் தனித்தமிழாகச் சிந்திக்கின்ற அடிகளார் மொழித் தூய்மை கருதி சுவாமி வேதாசலம் என்ற தம் பெயரைத் தமிழ்ப்படுத்தி 'மறைமலையடிகள்' என்று மாற்றிக் கொண்டார். தமது அன்பு மகள் நீலாம்பிகை அம்மையாரையும் இவ்வழியே நெறிப்படுத்தினார். இவ்வம்மையாரும் தந்தையாரின் அறிவுறுத்தலின்படி தமிழ்ப்பற்று மிக்க பெருமகளாகத் திகழ்ந்தார். நீலாம்பிகையார் வாழ்நாளெல்லாம் தனித்தமிழ்ச் சிந்தனையாளராக இனம் காட்டப்படுகின்றார். திராவிடன், தேசாபிமானி, ஆனந்த போதினி, தமிழ்நாடு முதலிய இதழ்களில் தூய தமிழ்க் கட்டுரைகள் எழுதித் தமிழ் மொழியின் சிறப்பை உலகறியச் செய்தார். தனது வழித் தோன்றலை மட்டுமின்றி மருமகன் திருவரங்கனாரையும் இந்த அறப்போரில் ஈடுபடச் செய்தார் அடிகளார். தமிழரின் தொன்மைச் சமயமான சைவநெறியை உலகறியச் செய்ய திருவரங்கனார் மூலம் 1920இல் தென்னிந்திய சைவ சித்தாந்தக் கழகத்தைத் தொடங்கினார். இக்கழகத்தின் வழி தனித்தமிழை வளர்த்தெடுக்க 1923இல் செந்தமிழ்ச்செல்வி என்ற திங்கள் இதழும் தொடங்கப்பட்டது. எளிய மக்களிடம் தனித்தமிழ்ப் பற்றிய புரிதலைக் கொண்டு சேர்க்கவும் தமிழ்ப்பற்றாளர்கள் பலரும் தங்கள் கருத்தை வெளியிடவும் இவ்விதழ் பேருதவி புரிந்தது. அடிகளாரின் நோக்கம் இவ்விதழ் மூலம் செவ்வனே பரவலாக்கப்பட்டது.
மொழிகாத்தலில் அகராதிப்பணி தலையாயது. அதனை நன்குணர்ந்த நீலாம்பிகையார், வடசொல் தமிழ் அகர வரிசை (1937), மாகாணத் தமிழ்ச்சங்கம் வெளியிட்ட கலைச்சொல் அகராதி (1938), தமிழ்ப்பாதுகாப்புக் கழகம் வெளியிட்ட கலைச்சொல் அகராதி (1938), தமிழ்ப் பாதுகாப்பு நூற்றிரட்டும் ஆட்சிச் சொல் அகர வரிசையும் (1938) ஆகியனவற்றைத் தனித்தமிழியக்கத்தின் வழி செவ்வனே செய்திருக்கின்றார். மொழித்தூய்மை கருதிச் செய்யப்பட்ட இப்பனுவல்கள் தனித்தமிழியக்க வரலாற்றில் முத்திரை பதித்தவை. இப்படியாக அடிகளார் தாம் மட்டுமல்லாது தனது குடும்பத்தினரையும் மொழிப்பணியில் ஈடுபட வைத்தமை சமூகப்பொறுப்பின் ஆவேச வெளிப்பாடு, தனித்தமிழில் எழுதவும் தனித்தமிழில் பேசவும் முனைப்போடு செயல்பட்ட அடிகளாரின் மொழிப்பணியால் தமிழின் இனிமையும் செவ்வியல் மொழிக்கான தகுதியும் தெற்றெனப் புலனாயின.
தனித்தமிழ் இயக்கப் போராட்டக்கனல் தமிழுக்கு வலிமை சேர்க்கும் விதமாக தோற்றம் கண்டது. வடமொழி உதவியின்றியே தமிழ் தனித்தியங்க வல்லது எனக் கால்டுவெல்லும், 'உரிமை மீது ஆண்மை காட்டாச் சாந்தம் பிணத்தில் பிறந்த சீதம்" என எழுதிய மனோன்மணியம்



# தனித்தமிழ் இயக்க வரலாற்றில் மறைமலையடிகள்

முனைவர்: க. பிரீதா
உதவிப் பேராசிரியர் - தமிழ்த்துறை,
சி.டி.டி.இ. மகளிர் கல்லூரி

சுந்தரனாரும் தமிழின உணர்வைத் தட்டி எழுப்பினர். தமிழறிஞர் வி.கோ. சூரிய நாராயண சாத்திரியார் தனது பெயரைத் தூய தமிழில் 'பரிதிமாற் கலைஞர்" என மாற்றிக் கொண்டார். 1906இல் பாம்பன் சுவாமிகள் எழுதி வெளியிட்ட 'சேந்தன் செந்தமிழ்" புத்தகம் தனித்தமிழால் உருவானது. 1908இல் விருதை சிவஞானயோகிகளின் முயற்சியில் உருவான திராவிடர் கழகத்தின் சட்டதிட்டங்கள் முழுமையாகத் தூய தமிழிலேயே இயற்றப்பட்டன. 1915இல் சுப்பிரமணிய சிவா தாம் ஆசிரியராக விளங்கிய ஞானபானு இதழில் தூய தமிழில் எழுதுபவர்களுக்கு பரிசு தருவதாக அழைப்பு விடுத்தார்.

அடிகளாரின் காலக்கட்டத்திலேயே தமிழறிஞர்கள் பலர் ஆய்வின் வழி தனித்தமிழியக்கத்திற்குப் பெரும்பங்காற்றினர். பொறியியல் அறிஞர் பா.வே. மாணிக்க நாயக்கர் ஆய்வுக் கட்டுரைகளும் சொற்பொழிவுகளும் தனித்தமிழில் நிகழ்த்தினார். இதனூடாக அறிவியல் கல்வியைத் தனித்தமிழில் பயிற்றுவிக்க முடியும் எனச் சாதித்துக் காட்டினார். நா.மு. வேங்கடசாமி நாட்டார், சோமசுந்தர பாரதியார், சிதம்பரநாதச் செட்டியார், மகிழ்நன் (சந்தோசம் என்னும் பெயரைத் தமிழ்ப்படுத்திக் கொண்டவர்), இளவழகனார், பாரதிதாசனார், ம. இராசமாணிக்கனார் போன்றோர் தனித்தமிழியக்கத்திற்கு ஆதரவாளர்களாக விளங்கினர். தமிழ்ச்சமூக அமைப்பில் இவ்வியக்கத்தின் செயல்பாடுகள் தமிழினத்தின் அறிவுப்புலமையையும் ஒன்றை புரிந்து கொள்வதில் உள்ள தாய்மொழியின் நுட்பத்தையும் பறைசாற்றுகின்றன.

'தமிழையும் பிறமொழியையுங் கற்கக்கற்கத் தமிழ்மொழிச் சொற்கள் இவை அயல்மொழிச் சொற்கள் இவையென்று நன்குணர்ந்து தமிழில் ஏனையவற்றைக் கலவாமறபேசுதல் எழுதுதலும், தமிழில் முன்னமே வழக்கு வீழ்ந்த சொற்களையுந் திரும்ப எடுத்து வழங்க விடுதலும் அல்லவோ கற்றவர் அம்மொழியைப் பாதுகாத்து வளர்த்தற்குச் செய்யும் நன்முறையாகும்"

என மறைமலையடிகள் கூறுகின்றார். தமிழ்மொழி அதனுடைய தனித்தன்மையை இழக்காமல் மேலும் மேலும் செழிக்க வேண்டுமென்றால் இக்கொள்கையைத் தமிழாய்ந்த சான்றோர்கள் கடைப்பிடியாகக் கொண்டு கடமையாற்றி செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்தல் வேண்டும். ஐக்கிய நாடுகளின் கல்வி அறிவியல் பண்பாட்டுக் கழகம் (ஹிழிணிஷிசிளி) இன்னும் 50 ஆண்டுகளில் வழக்கிழந்து போகும் மொழிகளின் வரிசையில் தமிழும் ஒன்றெனக் கூறியுள்ளது. இக்கருத்தை பொய்ப்பிக்கச் செய்வது தமிழராகப் பிறந்தோர் அனைவரின் தலையாய பணியாகும்.